පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
பேராதனைப் பல்கலைக்கழகம்
UNIVERSITY OF PERADENIYA

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
தொடர் தொலைக் கல்வி நிலையம்
CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - 2016 අගෝස්තු
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி) - 2016 ஆகஸ்ட்
GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) – AUGUST 2016

# மெய்யியல் - 1
# பொது உளவியல் ( PHG- I )

இவ்வினாத்தாளில் எல்லாமாக பத்து ( 10) வினாக்கள் காணப்படுகின்றன. எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
எழுத்து தெளிவில்லாவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
நேரம் - மூன்று மணித்தியாலம்.

---

01. "உளவியல் என்பது நனவு மற்றும் நனவிலி அனுபவத்தின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய மனம் மற்றும் நடத்தை பற்றிய ஆய்வாகும்". இக்கூற்றை ஆராய்க.

02. உளவியலில் பயன்படுத்தப்படும் பரிசோதனை முறையின் முக்கிய அம்சங்களை விபரிக்குக.

03. உமது தேர்வுக்குரிய ஒரு உளவியல் பள்ளியைக் கூறி பின்வரும் தலைப்புக்களை விபரிக்குக.

(1) ஸ்தாபகர்
(2) இயல்பு
(3) அணுகுமுறை

04. **ஒன்றில்**

சிக்மண்ட் புரொய்டின் நனவிலி மனம் என்ற கருத்தை **அல்லது** சிக்மண்ட் புரொய்டின் ஆளுமைக் கட்டமைப்பு மாதிரியை விளக்குக.

05. ஜாக்ஸ் லக்கானின் பின்வரும் கருப் பொருட்களை நுணுகி ஆராய்க.

(1) நனவிலி மனதின் அமைப்பும் மொழியின் அமைப்பும்
(2) கண்ணாடி எண்ணக்கரு

06. பின்வரும் உளவியலாளர்களுள் எவரேனும் **இருவரின்** பங்களிப்பினை மதிப்பிடுக.

(I) ஜோன் வொட்சன்
(II) வில்ஹெல்ம் வூண்ட்
(III) மக்டுகல்
(IV) ஜுன் பியாஜே
(V) ஆபிரகாம் மாஸ்லோ

07. மனவெழுச்சி என்றால் என்ன? மனவெழுச்சி குறித்த ஏதேனும் இரு அடிப்படைக் கோட்பாடுகளைக் கூறி சுருக்கமாக ஆராய்க.

08. I கற்றலின் இயல்பைப் பரிசீலிக்குக.

II. ஆக்க நிலையிறுத்தல் கற்றல் கோட்பாட்டின் பிரதான செயல் இலக்குகளை மதிப்பிடுக.

09. பின்வரும் முடிவை நியாயப்படுத்துக.

"தனியாள் வேறுபாடு என்பது மரபு நிலையினதும் சுற்றுச் சூழ்நிலையினதும் (சூழல்) ஒரு விளைவு ஆகும".

10. ஏதேனும் **இரண்டினைப்** பற்றி கருத்துரைக்குக.

I. பிறழ்வு நிலை
II. பதகள நிலை (Anxiety)
III. மருத்துவ உடல்நல உளவியல் ( Clinical health psychology)
IV. தனிநிகழ்வாய்வு முறை
V. மது பழக்கத்திற்கு அடிமையாதல்

=======